All Rights Reserved

# இலங்கைக் கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

## இறுதி நிலைப் பரீட்சை – 2012 ஜனவரி

## (58) வரியியல்

Taxation

21-01-2012
காலை
[9.00 – 12.00]

**நேரம்: மூன்று (03) மணித்தியாலம்**

பக்கங்களின் எண்ணிக்கை: 08
வினாக்களின் எண்ணிக்கை : 05

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்**

  (1) *எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக*

  (2) ***விடைகள் யாவும்*** *உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் நீங்கள் பரீட்சை எழுத விண்ணப்பித்த அதே ஒரு மொழியிலேயே எழுதப்பட வேண்டும்.*

  (3) *கணிப்பான்கள் பயன்படுத்துதல் அனுமதிக்கப்பட்டுள்ளது.*

  (4) *சகல செயல்முறைகளும் கணிப்புக்களையும் முன்வைக்குக. உங்களால் மேற்கொள்ளப்பட்ட எடுகோள்கள் ஏதுமிருப்பின் தெளிவாகக் குறிப்பிடுக.*

  (5) *மொத்தம் 100 புள்ளிகள்.*

---

01. வ/வு வித்ரா (தனியார்) கம்பனி, சனவரி 2009 இல் உருவாக்கப்பட்ட ஒரு வதிவிடக் கம்பனியாகும். அதனது தொழிற்சாலையும் அலுவலகமும் இரத்தினபுரியில் அமைந்துள்ளன. இந்தக் கம்பனி நில ஓடுகளையும் சுவர் ஓடுகளையும் உற்பத்தி செய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது. 60% வ/வு வித்ரா (தனியார்) கம்பனியின் பங்குகள், வித்ரா ஹோல்டிங் பி.எல்சி. இன் வசமுள்ளன.

31 மார்ச் 2011 ஆம் முடிவடைந்த ஆண்டின்போது சகல செலவுகளையும் தாக்கல் செய்து, சகல வருமானங்களையும் கணக்கிற் கொண்ட பின்னர் பெற்ற வருமான வரிக்கு முந்திய இலாபம் ரூ.1,250,000/-. அவ்வாண்டிற்கான கம்பனியின் புரள்வு ரூ.230,000,000/- ஆக இருந்தது.

**நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் :**

**குறிப்பு 1**

**ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

**கிரயம்**

| விபரம் | 01.04.2010 இல் மீதி ரூ. | சேர்ப்பனவு ரூ. | விற்பனை ரூ. | 31.03.2011 இல் மீதி ரூ. |
|---|---|---|---|---|
| இறையிலி காணி | | 1,000,000 | - | 1,000,000 |
| கட்டிடம் | 11,000,000 | 1,200,000 | - | 12,200,000 |
| இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 24,000,000 | 3,600,000 | - | 27,600,000 |
| மோட்டார் வாகனங்கள் | 15,800,000 | 3,000,000 | 2,500,000 | 16,300,000 |
| கணினி வன்பொருள் | 1,000,000 | 750,000 | - | 1,750,000 |
| கணினி மென்பொருள் | 800,000 | - | - | 800,000 |
| தளபாடம் | 900,000 | 400,000 | - | 1,300,000 |
| **மொத்தம்** | **53,500,000** | **9,950,000** | **2,500,000** | **60,950,000** |

பெறுமானத்தேய்வு

| விபரம் | 01.04.2010 இல் மீதி ரூ. | ஆண்டிற்கான அறவீடு ரூ. | விற்பனை ரூ. | 31.03.2011 இல் மீதி ரூ. |
|---|---|---|---|---|
| | | | | |
| கட்டிடம் | 1,100,000 | 580,000 | - | 1,680,000 |
| இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 960,000 | 1,440,000 | - | 2,400,000 |
| மோட்டார் வாகனங்கள் | 3,950,000 | 3,160,000 | 625,000 | 6,485,000 |
| கணினி வன்பொருள் | 1,000,000 | 750,000 | - | 1,750,000 |
| கணினி மென்பொருள் | 400,000 | 100,000 | - | 500,000 |
| தளபாடம் | 225,000 | 400,000 | - | 625,000 |
| **மொத்தம்** | **7,635,000** | **6,430,000** | **625,000** | **13,440,000** |

(1) 01.04.2010 இல் உள்ளவாறான அனைத்து ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களும் 01 சனவரி 2009 இல் கொள்வனவு செய்யப்பட்டவை அல்லது கட்டப்பட்டவை.

(2) கம்பனியானது குத்தகைக்கு எடுக்கப்பட்ட காணி ஒன்றில் தொழிற்சாலைக் கட்டிடம், அலுவலகக் கட்டிடம், முகாமையாளர் வதிவிடம் ஆகிய கட்டிடங்களைக் கட்டியது. இந்த 30 ஆண்டுகால குத்தகை 01 சனவரி 2009 இல் ஆரம்பமாகியது. வருடாந்தக் குத்தகை ரூ.500,000 ஆகவும் இது வருமானக்கூற்றில் தாக்கல் செய்யவும் பட்டுள்ளது. நடப்பாண்டில் களஞ்சியசாலைக்கு என கட்டிடமொன்றை அமைக்கும் பொருட்டு இன்னுமொரு காணி கொள்வனவு செய்யப்பட்டது. இக்கட்டிடம் பூர்த்தி செய்யப்பட்டு மார்ச் 2011 இலிருந்து உபயோகிக்கப்படுகிறது.

(3) குத்தகைக்கு எடுக்கப்பட்ட காணியில் அமைக்கப்பட்ட கட்டிடத்திற்கான கிரயம் பின்வருமாறு :

| | ரூ. |
|---|---|
| தொழிற்சாலை, அலுவலகக் கட்டிடங்கள் | 9,000,000 |
| முகாமையாளருக்கான வசிப்பிடம் | 2,000,000 |
| **மொத்தம்** | **11,000,000** |

(4) 01 ஏப்ரல் 2010 இல் உள்ளவாறான மோட்டார் வாகனங்களின் கிரயம் பின்வருமாறு :

| | ரூ. |
|---|---|
| வியாபாரப் பயணங்களுக்காக பாவிக்கப்படும் இரு (2) மோட்டார் கார்கள் | 5,800,000 |
| நான்கு (4) மோட்டார் லொறிகள் | 10,000,000 |
| **மொத்தம்** | **15,800,000** |

(5) புதிய லொறியொன்று 01 டிசம்பர் 2010 அன்று வாங்கப்பட்டதுடன் பழைய லொறி ஒன்று 31 சனவரி 2011 இல் விற்கப்பட்டது.

(6) 01 ஏப்ரல் 2010 இல் உள்ளவாறான கணினி வன்பொருட்கள் மூன்று (03) ஆண்டுகால நிதிக் குத்தகை ஒப்பந்தத்தின் அடிப்படையில் 01 சனவரி 2010 திகதியன்று எடுக்கப்பட்டன. இவற்றிற்கான மாதாந்தத் தவணைக் கட்டணம் ரூ.35,000/- ஆகும். ஏனைய கணினிகள் நடப்பாண்டில் கொள்வனவு செய்யப்பட்டவை.

(7) 01 ஏப்ரல் 2010 இல் இருந்த கணினி மென்பொருள் இலங்கையில் அபிவிருத்தி செய்யப்பட்டதாகும்.

## குறிப்பு 2

2011 மார்ச் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான தேறிய இலாபத்தைக் கணக்கிடும் பொருட்டு தாக்கல் செய்யப்பட்ட சில செலவுகளினதும் வரவு வைக்கப்பட்ட வருமானங்களினதும் விபரங்கள் வருமாறு :

(1) நிதிக் குத்தகை வட்டி ரூ.120,000/-.

(2) வெளிநாட்டுப் பணயச்செலவு ரூ.825,000/- நிறுவனத்தின் தொழில்நுட்ப முகாமையாளர் புதியதொரு ஓடு மினுக்குகின்ற இயந்திரமொன்றைப் பார்வையிடுவதற்காக இத்தாலி சென்றுவர ஏற்பட்ட செலவாகும்.

(3) வித்ரா ஹோல்டிங் பி.எல்.சி. இற்குச் செலுத்தப்பட்ட முகாமைத்துவக் கட்டணம் ரூ.4,500,000/-.

(4) ஊபசாரச் செலவாக ரூ.75,000/- ஏற்பட்டது.

(5) வருமானக் கூற்றில் தாக்கல் செய்யப்பட்ட அறவிடமுடியாக் கடன் கணக்கின் விபரம் வருமாறு :

| | ரூ. |
|---|---|
| நிறுவனத்திலிருந்து விலகிக்கொண்ட பணியாளருக்கு வழங்கிய கடன் | 10,000 |
| **ஜயவர்த்தன** (எதுவித சொத்துக்களும் இன்றி இறந்துபோன வாடிக்கையாளர்) | 45,000 |
| எஞ்சிய கடன்பட்டோரின் மீதியில் 5% | 120,000 |
| **மொத்தம்** | **175,000** |

(6) காணி ஒன்றைக் கொள்வனவு செய்ய ஏற்பட்ட சட்டச் செலவு ரூ.120,000/-. மேலும் மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட பணியாளர் சம்பந்தப்பட்ட வழக்கிற்கான செலவு ரூ.30,000/-.

(7) விளம்பரச் செலவுகள் பின்வருமாறு :

| | ரூ. |
|---|---|
| அதியுயர் ரக நில ஓடுகளை அறிமுகப்படுத்துமுகமாக ஏற்பட்ட கிரயம் | 2,512,000 |
| இலத்திரனியல் ஊடகங்களில் செய்யப்பட்ட விளம்பரம் தொடர்பான கிரயம் | 1,950,000 |
| **மொத்தம்** | **4,462,000** |

(8) மோட்டார் வாகனங்களுக்கான பராமரிப்பு, திருத்தச் செலவுகள் வருமாறு :

| | முகாமையாளர்களால் பாவிக்கப்படும் மோட்டார் கார்கள் ரூ. | லொறிகள் ரூ. |
|---|---|---|
| எரிபொருள் | 158,000 | 245,000 |
| திருத்த, பராமரிப்புச் செலவுகள் | 45,000 | 120,000 |
| **மொத்தம்** | **203,000** | **365,000** |

பணியாளர்களுக்கு இலவசமாக வழங்கப்படும் போக்குவரத்து சேவை நன்மைகள், உழைக்கும்போதே வரி செலுத்தும் திட்டத்தின் (PAYE tax) கீழ் வரி செலுத்துவதற்கு கணக்கில் எடுக்கப்பட்டுள்ளன.

(9) கம்பனியானது அரசாங்கத்திற்கு ரூ.480,000/- இனையும் **ஹெல்ப்ஏஜ்** என்ற அனுமதியளிக்கப்பட்ட அறக்கொடை நிறுவனத்திற்கு பணமாக ரூ.50,000/- இனையும் வழங்கியது.

(10) ஏனைய வருமானங்களின் சுருக்கம் வருமாறு :

| | **ரூ.** |
|---|---|
| லொறி விற்ற இலாபம் | 100,000 |
| திறைசேரி உண்டியல்களின் முதலீடுகளில் இருந்து பெற்ற வட்டி | 450,000 |
| இணைக் கம்பனி ஒன்றில் (associate company) பெற்ற பங்கிலாபம் | 100,000 |
| வெற்றுக் கொள்கலன்கள் விற்றுப்பெற்ற வருமானம் | 480,000 |

(11) கம்பனி பணிக்கொடைக்காக ரூ.1,200,000/- இனை நடப்பாண்டில் ஏற்பாடு செய்தது. எனினும் நடப்பாண்டில் எதுவித கொடுப்பனவும் செய்யப்படவில்லை.

(12) வருமானக்கூற்றில் தாக்கல் செய்யப்பட்ட முத்திரை வரி கணக்கின் விபரம் வருமாறு :

| | **ரூ.** |
|---|---|
| பற்றுச்சீட்டுகளில் ஒட்டப்பட்ட முத்திரைகளின் பெறுமதி | 23,000 |
| காணிக் கொள்வனவிற்கு செலுத்திய முத்திரை வரி | 120,000 |
| நிதிக்குத்தகை ஒப்பந்தத்திற்கு செலுத்திய முத்திரை வரி | 25,000 |

(13) ஏனைய செலவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளன.

| | **ரூ.** |
|---|---|
| வருடாந்த **"பிரித்"** ஓதும் வைபவத்திற்கு ஏற்பட்ட செலவு | 270,000 |
| கூலியாளர்களால் களவாடப்பட்ட ஓடுகளின் பெறுமதி | 25,250 |
| **மொத்தம்** | **295,250** |

**குறிப்பு 3**

2009/10 ஆண்டிலிருந்து கொண்டுவரப்பட்ட வரிகளுக்காக செம்மை செய்யப்பட்ட நட்டம் ரூ.10,652,000/-.

**குறிப்பு 4**

நடப்பாண்டிற்குச் செலுத்தப்பட்ட பொருளாதார சேவைக் கட்டணம் ரூ.500,000/-. சுய வரிமதிப்பீட்டு முறையில் செலுத்தப்பட்ட வருமானவரி ரூ.1,000,000/-.

மேற்கூறிய தகவல்களிலிருந்து வ/வு வித்ரா (தனியார்) கம்பனியின் வரிமதிப்பாண்டு 2010/11 தொடர்பாக பின்வருவனவற்றைக் கணிக்குக.

(a) ஒவ்வொரு மூலத்திலிருந்தான சட்ட நியதி வருமானம்,

(b) மொத்த சட்ட நியதி வருமானம்,

(c) வரிமதி வருமானம்,

(d) வரிவிதி வருமானம்,

(e) செலுத்தப்பட வேண்டிய மொத்த வருமான வரி,

(f) செலுத்தப்பட வேண்டிய மிகுதி வருமான வரி,

[கருதப்படும் பங்கிலாப வரி (deemed dividend tax), பெ.சே.வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி என்பவற்றால் ஏற்படும் விளைவுகளைப் புறக்கணிக்குக.]

(35 புள்ளிகள்)

**02.** வதிவு செய்யும் தனியாளான ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி திரு. **அபேநாயக்க** 65 வயதுடையவராவார். ஆவர் தற்போது வ/வு லயன் பாதுகாப்பு (தனியார்) கம்பனியில் சிரேஷ்ட பாதுகாப்பு அலுவலர் என்ற பதவியில் முழுநேர ஊழியராகப் பணியாற்றுகிறார்.

வரி மதிப்பாண்டு 2010/11 (இனிமேல் “ஆண்டு” என்று கீழே குறிப்பிடப்படும்) தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

(1) இலங்கை அரசிடமிருந்து பெற்ற மாதாந்த ஓய்வூதியப் பணம் ரூ.35,000/-.

(2) வ/வு லயன் பாதுகாப்பு (தனியார்) கம்பனியில் இருந்து பெற்ற மாதாந்தச் சம்பளம் ரூ.70,000/- ஏப்ரல் 2010 இல் உபகாரக் கொடுப்பனவாக ரூ.150,000/- கொடுக்கப்பட்டது. ஆண்டு 2010/11 இற்கான மேலுமொரு உபகாரக் கொடுப்பனவாக ரூ.200,000 ஏப்ரல் 2011 இல் வழங்கப்பட்டது. கழிக்கப்படும் ஊழியர் சேமலாப நிதி (EPF) சம்பளத்தின் 8% ஆகும்.

(3) **அபேநாயக்காவிற்கு** அலுவலகப் பாவனைக்கும் சொந்தப் பாவனைக்குமாக எரிபொருள் வசதியுடன்கூடிய (3,000 CC) வலு உள்ள ஜீப் வழங்கப்பட்டிருந்தது. சொந்தப் பாவனைக்கென அவர் பணி கொள்பவருக்கு எதனையும் வழங்கவில்லை. பிரயாண அட்டவணையையும் பேணுவதில்லை.

(4) மார்ச் 2010 இல் வாங்கிய கூட்டுமாடித் தொகுதியில் அவர் குடும்பத்துடன் வசித்து வருகிறார். ஜுன் 2008 இல் அமைக்கப்பட்ட அக்கூட்டுமாடித் தொகுதி 2,500 சதுர அடி பரப்பளவைக் கொண்டது. அதன் வரி மதிப்பீட்டுப் பெறுமதி ரூ.140,000/- ஆகும்.

(5) அவரது பெற்றோரிடமிருந்து பரம்பரைச் சொத்தாகப் பெற்ற கிராமத்து மூதாதையர் வீட்டினை மாதாந்தம் ரூ.25,000/- இன்படி ஏப்ரல் 2010 இலிருந்து அவர் வாடகைக்கு விட்டிருந்தார். வீடு, வரிமதிப்பீட்டிற்கு உட்படாத (unrated area) இடத்தில் இருக்கிறது. இவ்வீட்டிற்குத் திருத்தச் செலவாக ரூ.40,000/- இனை நடப்பாண்டில் அவர் செலுத்தியிருந்தார்.

(6) தேசிய சேமிப்பு வங்கியில் திரு. **அபேநாயக்க** முதலீடு செய்த நிலையான வைப்பு ரூ.2,000,000/- இலிருந்து நடப்பாண்டில் பெற்ற வட்டி ரூ.180,000/-. திறைசேரி உண்டியல்களில் இருந்து பெற்ற வட்டி ரூ.120,000/- ஆகும்.

(7) **1994** ஏப்ரல் **03** ஆம் திகதி பிறந்த திரு. **அபேநாயக்கா**வின் மகள் **சினிது**, சம்பத் வங்கி பி.எல்.சி. இல் ஒரு சிறுவர் சேமிப்புக் கணக்கொன்றை வைத்துள்ளார். நடப்பாண்டில் இதிலிருந்து பெறப்பட்ட மொத்த வட்டி ரூ.8,000/- அவரது கணக்கில் வரவு வைக்கப்பட்டது.

(8) **அபேநாயக்காவின்** மகள், தந்தையிடமிருந்து பெற்ற பணத்திலிருந்து ஒரு பரிசுச் சீட்டினை (Lottery) கொள்வனவு செய்தார். அவருக்கு முதல் பரிசாக ரூ.1,000,000/- கிடைத்தது. எனினும் நிறுத்தி வைத்தல் வரி கழித்த பின் காசாக ரூ.900,000/- மட்டுமே கிடைத்தது.

(9) திரு. **அபேநாயக்க டொயாட்டோ பி.எல்.சி.** இடமிருந்து பங்கிலாபங்கள் பெற்றார். பங்கிலாபக் கூற்றில் பின்வரும் விபரங்கள் காணப்பட்டன.

| | **ரூ.** |
|---|---|
| வரிக்கு உட்பட்ட இலாபங்களிலிருந்து பெறப்பட்ட பங்கிலாபம்,<br>தேறிய பங்கிலாபம் | 45,000 |
| பங்கிலாப வரி | 5,000 |
| **மொத்தப் பங்கிலாபம்** | **50,000** |
| வரிக்கு உட்படாத இலாபங்களிலிருந்து பகிரப்பட்ட பங்கிலாபம் | 70,000 |
| | **120,000** |

(10) திரு.அபேநாயக்க கூட்டுமாடித்தொகுதி வீட்டினை வாங்குவதற்கு சம்பத் வங்கி பி.எல்.சி. இடமிருந்து கடன் பெற்றிருந்தார். இதற்கென நடப்பாண்டில் அவர் ரூ.132,000/- இனை வட்டியாகவும் ரூ.115,000/- இனை மூலதனமாகவும் செலுத்தியிருந்தார்.

(11) நடப்பாண்டில் அவர் பின்வரும் நன்கொடைகளைச் செய்திருந்தார்.

| | **ரூ.** |
|---|---|
| அனுமதியளிக்கப்பட்ட அறக்கொடை ஒன்றிற்குக் கொடுத்த காசு நன்கொடை | 50,000 |
| தேசிய வைத்தியசாலையின் 48 ஆம் இலக்க வார்டினை வர்ணம் பூசுவதற்கு கொடுத்த வர்ணம் | 90,000 |
| | **140,000** |

(12) தனக்காகவும் தனது குடும்ப அங்கத்தினர்களுக்காகவும் எடுக்கப்பட்ட வைத்தியக் காப்புறுதிக்குச் செலுத்தப்பட்ட வருடாந்த கொடுப்பனவு ரூ.8,500/-.

(13) கழிக்கப்பட்ட உழைக்கும்போதே செலுத்தும் வரி (PAYE Tax) ரூ.64,600/-.

மேற்கூறிய தகவல்களிலிருந்து திரு. அபேநாயக்காவின் வரி மதிப்பாண்டு 2010/11 தொடர்பாக கீழ்வருவனவற்றைக் கணிக்குக.

(a) ஒவ்வொரு வருமான மூலத்திலிருந்தும் சட்ட நியதி வருமானம்,

(b) மொத்த சட்ட நியதி வருமானம்,

(c) வரிமதி வருமானம்,

(d) வரிவிதி வருமானம்,

(e) செலுத்த வேண்டிய மொத்த வருமானவரி,

(f) செலுத்த வேண்டிய மிகுதி வருமான வரி,

(g) வரிவிலக்கு வருமானம் (ஏதேனும் இருப்பின்).

(30 புள்ளிகள்)

**03.** பிரேமா, அமா என்ற தாயும் மகளும் இலாப நட்டங்களை முறையே 3:1 அடிப்படையில் பகிரும் விதத்தில் அழகுபடுத்தும் நிலையம் ஒன்றை பங்குடைமையில் நடத்துகின்றனர்.

வரிமதிப்பாண்டு 2010/11 இற்கான விபரங்கள் பின்வருமாறு :

| | | ரூ. | ரூ. |
|---|---|---|---|
| புரள்வு (விற்பனை) | | - | 2,200,000 |
| கூட்டுக : எடுப்பனவு வட்டி : | | | |
| பிரேமா | | 25,000 | |
| அமா | | 8,000 | 33,000 |
| | | | 2,233,000 |
| கழி : நேர் கிரயம் | | | (430,000) |
| ஏனைய செலவுகள் : | | | **1,803,000** |
| சம்பளம் | பிரேமா | 180,000 | |
| | அமா | 80,000 | |
| | கிளிங்டன் | 120,000 | |
| | கணக்கர் | 144,000 | |
| மூலதன வட்டி | பிரேமா | 120,000 | |
| | அமா | - | |
| பெறுமானத் தேய்வு | | 50,000 | |
| காகிதாதிகள் | | 120,000 | |
| கட்டிட வாடகை | | 180,000 | |
| விளம்பரம் (அறிமுகப் பிரசாரம்) | | 80,000 | (1,074,000) |
| **தேறிய இலாபம்** | | | **729,000** |

நடப்பாண்டில் வியாபாரத்திற்காக சிகை வெட்டும் இயந்திரம் ஒன்றை ரூ.100,000/- இற்கு கொள்வனவு செய்தனர். இதனைத் தவிர வேறு ஏதும் சொத்துக்கள் பங்குடைமையில் இல்லை.

கிளிங்டன் பிரேமாவின் கணவராவார். கட்டிடம் அவருக்குச் சொந்தமானது. அவர் பங்குடைமையில் காசாளராகப் பணிபுரிகிறார்.

மேற்கூறிய தகவல்களிலிருந்து வரிமதிப்பாண்டு 2010/11 பின்வருவனவற்றைக் கணிப்பிடுமாறு நீங்கள் கேட்கப்படுகிறீர்கள்.

(a) பங்குடைமையின் பகிரத்தகு இலாபம் / நட்டம்

(b) பங்குடமையினால் செலுத்த வேண்டிய மொத்த பங்குடமை வரி

(c) பகிரத்தக்க இலாபம் / நட்டம் இனை பங்காளரிடையே பகிர்ந்து இரு பங்காளர்களுக்கும் வியாபாரத்திலிருந்து கிடைக்கும் சட்ட ரீதியான வருமானம்

(d) இரு பங்காளர்களுக்கும் கிடைக்கக்கூடிய வரி வரவு (tax credit).

(தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியினைப் புறக்கணிக்குக.) (16 புள்ளிகள்)

**04.** (a) 2011 இன் வரி காலங்களுக்கான “விருப்பு பெறுமதி சேர் வரி” (Optional VAT)இனை பதிவு செய்வதற்கு அவசியமான பெறுமதி எல்லைகள் (threshold) எவை ? (04 புள்ளிகள்)

(b) பெறுமதி சேர் வரி சட்டத்தின் பிரகாரம் ஏற்புடைய வரி விலைப்பட்டியலில் (Tax Invoice) அடங்க வேண்டிய முக்கிய விபரங்கள் யாவை ? (04 புள்ளிகள்)

(மொத்தம் 08 புள்ளிகள்)

**05.** (a) அறவிடும் சரத்தின் பிரகாரம் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியினைச் செலுத்த வேண்டிய நபர்கள் எவர் ? (04 புள்ளிகள்)

(b) வருமான வரிச் சட்டத்தின் பிரிவுகளுக்கு அமைய, மேன்முறையீட்டிற்கும் (appeal) ஆட்சேபனைக்கும் (objection) இடையேயான வித்தியாசங்களைச் சுருக்கமாக கூறுக.

*(வருமான வரிச் சட்டத்தின் பிரகாரம் ஒரு வலுவான மேன்முறையீட்டினைச் செய்ய வேண்டிய எல்லா நிபந்தனைகளையும் பரீட்சார்த்தி கூற வேண்டியதில்லை.)*

(04 புள்ளிகள்)

(c) ஊரிய தினத்திலோ அதற்கு முன்னராகவோ வருமான விபரக் கொத்தைக் கோப்பிடுவதின் அனுகூலங்களைச் சுருக்கமாக விளக்குக.

(03 புள்ளிகள்)

(மொத்தம் 11 புள்ளிகள்)

– o0o –